**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 17/2025 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | பாரதி |
| Father Name | : | ரவி |
| Village | : | தாசநாயக்கன்பட்டி |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 37 |

Both Accused are present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27.07.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது தாசநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 13.12.2023 ஆம் தேதியன்று என்னுடைய அம்மாவும், பூபாலனுடைய சித்தியும் பொது பைப்பில் தண்ணீர் பிடித்துக்கொண்டிருக்கும்போது அவர்கள் இருவருக்கும் சண்டை வந்துவிட்டது. அடுத்த நாள் காலையில் பூபாலன் வந்து உனது அம்மா எதற்கு என்னுடைய சித்தியிடம் பிரச்சனை செய்தார்கள் என்று கேட்டுவிட்டு என்னை ஆஜர் எதிரி பூபாலன் நெஞ்சில் கத்தியால் குத்திவிட்டார். தற்போது என்னிடம் காட்டப்படும் கத்தியால்தான் எதிரி பூபாலன் என்னைகுத்தினார். **அது சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எனது மனைவி 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி கரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். பின்னர் வெள்ளகோவில் போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்று கையொப்பம் பெற்றுச் சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

போதிய வாய்ப்பளித்தும் எதிரிகள் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.07.27 17:50:07 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 17/2025 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | கௌசல்யா |
| Father Name | : | பாரதி |
| Village | : | தாசநாயக்கன்பட்டி |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 30 |

Both Accused are Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27.07.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது தாசநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 13.12.2023 ஆம் தேதியன்று என்னுடைய மாமியாருக்கும், பூபாலனுடைய சித்திக்கும் பொது பைப்பில் தண்ணீர் பிடித்துக்கொண்டிருக்கும்போது அவர்கள் இருவருக்கும் சண்டை வந்துவிட்டது. அடுத்த நாள் காலையில் எனது மாமியாரிடம் பூபாலன் வந்து என்னுடைய சித்தியிடம் எதற்கு பிரச்சனை செய்தீர்கள் என்று கேட்டு எனது கணவரை ஆஜர் எதிரி பூபாலன் நெஞ்சில் கத்தியால் குத்திவிட்டார். தற்போது என்னிடம் காட்டப்படும் கத்திதான் எதிரி பூபாலன் எனது கணவரை குத்த பயன்படுத்திய கத்தியாகும். பின்னர் நான் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி கரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

போதிய வாய்ப்பளித்தும் எதிரிகள் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.07.27 17:50:14 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 17/2025 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | ரவி |
| Father Name | : | தங்கதுரை |
| Village | : | தாசநாயக்கன்பட்டி |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 60 |

Both Accused are Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27.07.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது தாசநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 13.12.2023 ஆம் தேதியன்று பூங்கொடிக்கும், பூபாலனுடைய சித்திக்கும் பொது பைப்பில் தண்ணீர் பிடித்துக்கொண்டிருக்கும்போது அவர்கள் இருவருக்கும் சண்டை வந்துவிட்டது. அடுத்த நாள் காலையில் எனது மனைவியிடம் பூபாலன் வந்து என்னுடைய சித்தியிடம் எதற்கு பிரச்சனை செய்தீர்கள் என்று கேட்டு எனது மகனை ஆஜர் எதிரி பூபாலன் நெஞ்சில் கத்தியால் குத்திவிட்டார். தற்போது என்னிடம் காட்டப்படும் கத்திதான் எதிரி பூபாலன் எனது மகனை குத்த பயன்படுத்திய கத்தியாகும். பின்னர் நான் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி கரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

போதிய வாய்ப்பளித்தும் எதிரிகள் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.07.27 17:50:24 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்